## தவக்காலம் 5ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

“பிறரை தீர்ப்பிடாதீர்கள்” என்ற இறை உண்மையை உணர்ந்து கொள்ள இத்தவக்கால ஞாயிறு வழிபாடு நம்மை அழைக்கின்றது. கடந்த காலத்தின் பாவம் எவ்வளவாய் இருந்தாலும் அதை விடுத்து, “இனி பாவம் செய்யாதீர்” என்றே இறைவன் உரைக்கிறார்.

பழையன கழிதலும், கடந்த காலத்தின் கசப்புகளும் மனதை அழுத்தாது, புதிய வாழ்வை பெற்றுக் கொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

இன்றைய முதல் வாசகத்தில், “முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள்; இதோ! புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன்” என்று புதுமையான வாழ்வை, புது வாழ்வை அனுபவித்து மகிழ இறைவன் அழைக்கின்றார். பாவத்தின் நிமித்தம் முணுமுணுப்பின் நிமித்தம் மக்களைக் கண்டிக்கிறார்; தண்டிக்கவில்லை. கனிவான வார்த்தைகளையும் வாழ்வையும் தந்து ஆசீர்வதிக்கின்றார். அவரின் புகழை எடுத்தியம்பவே அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இயேசு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பார்த்து, “இனி பாவம் செய்யாதீர்” என்று கடந்த காலத்தை மன்னித்து, புதுவாழ்வைத் தொடங்க ஆசீர்வதிக்கின்றார். கடந்த காலம் கசப்பானதாக இருப்பினும் அனைத்தையும் சரி செய்து நிகழ்காலத்தில் பயணிக்கவும், இனி இப்படி இருக்க வேண்டாம் என்று நாம் மாறுவதே இயேசு நமக்காக வைத்திருக்கும் இலக்கணம்.

அழுக்காகிப்போன பக்கங்களை
மீண்டும் மீண்டும் புரட்டாமல்
புதிய பக்கங்களில் தெளிவான வார்த்தைகளை
திருத்தமாக எழுதுவோம்.

இச்சிந்தனைகளை மனதில் தாங்கி இப்பலியில் இணைவோம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. புதுச்செயல் ஒன்றை நான் செய்கின்றேன் என்றவரே எம் இறைவா!

திருச்சபையை வழிநடத்தும் தலைவர்கள், பணியாளர்கள் எளிமையை தரித்து, மக்களோடு மக்களாக நின்று, புதுமையான செயல்களைச் செய்யவும், மக்களை புதுமையான பாதையில் வழிநடத்தும் அருள் தர வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. பாலைநிலத்தில் பாதை ஒன்றை அமைப்பேன் என்றவரே எம் இறைவா!

இயற்கை வளங்களை சிதைத்து எம் நாடு பாலைவனமாய் மாறிக் கொண்டிருக்கும் வேளையில், நடைபெறும் இத்தேர்தலில் சரியான தலைமையை, இயற்கையை, மக்களை நேசிக்கும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து சரியான பாதையை அமைக்க வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. இனி பாவம் செய்யாதீர் என்று விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை மன்னித்தவரே எம் இறைவா!

எங்களை நாங்களே ஆய்வு செய்து, மனத்தை நல்வழி நோக்கித் திருப்ப, கடந்த காலத்தை மறந்து, நிகழ்காலத்தில் பயணிக்கவும் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. கருணையின் மழையே எம் இறைவா!

கோடை கொந்தளிக்கும் இவ்வேளையில் எங்களுக்கு போதிய மழையை நீ தரவும், குடும்ப அமைதி, சந்தோஷம் நிறைந்திருக்கவும், மக்களின் உள்ளத்தின் வேண்டுதல்கள் இறைவனால் நிறைவேற்றப்படவும் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com